# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001.

## *மடிப்பு நுண்ணோக்கி உருவாக்கப் பணிமனை*

******

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், இராசிபுரம் ரோட்டரி சங்கமும் இணைந்து ஆசிரியர்களுக்கான **காகித மடிப்பு நுண்ணோக்கியைத் (Foldscope)** தயாரிக்கும் பயிற்சியை 09.8.2025 அன்று இராசிபுரம் ரோட்டரி ஹாலில் கொடுத்தன. பயிற்சியின் துவக்க விழாவில் இராசிபுரம் ரோட்டரி சங்கச் செயலர் மஸ்தான் வரவேற்புரை வழங்கினார். இராசிபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் சுரேந்திரன் பணிமனையைத் துவக்கி வைத்தார்.

காகித மடிப்பு நுண்ணோக்கியை 2014 ஆம் ஆண்டு இந்தியரான மனு பிரகாஷ் வடிவமைத்தார். அறிவியல் ஆய்வுகளுக்கு செலவு மிகுந்த கருவிகளை வடிவமைக்கும்போது அதிகப்படியான மக்களால் அவற்றைப் பயன்படுத்த முடியாது. அறிவியல் ஆய்வுக்கருவிகளை மலிவான விலையில் உயர்தரத்துடன் உருவாக்கி, அனைவருக்கும் கிடைக்கச் செய்வதால் அறிவியல் ஆராய்ச்சி வளரும். காகித மடிப்பு நுண்ணோக்கியை காகிதம் மற்றும் 140 மடங்குப் பொருட்களை உருப்பெருக்கம் செய்யும் திறன் கொண்ட ஒரு சிறிய ஆடியைக் (lens) கொண்டு தயாரிக்கலாம். இதனை செல்போனுடன் இணைத்து படமும் எடுக்கலாம்.

நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் தலைமையுரையில் பேசியதாவது : காகித மடிப்பு நுண்ணோக்கியானது 60 – 120 கிராம் எடையுடன் இருப்பதாலும், நீடித்து உழைக்கக்கூடிய வகையில் இருப்பதாலும், நீர்ப்புகாத் தன்மையுடன் இருப்பதாலும் இதனை ஆசிரியர்களும், மாணவர்களும் வெளிப்புற அறிவியல் ஆய்விற்குப் பயன்படுத்த முடியும் என்றும், இக்கருவியின் உதவியால் கண்ணிற்குத் தெரியாத ஒரு செல் உயிரியிலிருந்து கண்ணிற்குத் தெரியும் பொருட்கள் வரை இக்கருவிகளைக் கொண்டு உருப்பெருக்கம் செய்ய முடியும் என்றும், இக்கருவியைக் கேள்வி அடிப்படையிலானக் கற்றலுக்கும் (inquiry based learning), ஆசிரியர்களும், மாணவர்களும் அறிவியல் ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட காகித மடிப்பு நுண்ணோக்கி உதவும் என்றும் பேசினார்.

காகித மடிப்பு நுண்ணோக்கி உருவாக்கப் பணிமனைக்கு ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ப. அருளானந்தம் அவர்கள் கருத்தாளராகச் செயல்பட்டார். காகித மடிப்பு நுண்ணோக்கி உருவாக்கப் பணிமனையில் 92 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இராசிபுரம் ரோட்டரி சங்கச் சேவைத் திட்ட தலைவர் கருணாகர பன்னீர்செல்வம், பாண்டிச்சேரி ஆல் இந்தியா ரெக்கார்ட்ஸ் நிறுவனர் வெங்கடேசன் மற்றும் கலிபோர்னியா ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தால் விருது வழங்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் போல்ட்ஸ்கோப்பர் பிரகாஷ் போன்றோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் வேதராஜ பால்சன் நன்றி கூறினார்.